Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஆனி 24 ஆம் நாள் முஹர்ரம் 24 (8-7 61) சனிக்கிழமை இதழ் 124

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி வினியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனியா.

# குடியிருப்பாளர் ஜாபிதா

## புதுப்பிக்கப்படும்

### 18வயதுக்குமேற்பட்ட அனைவரும் கையெழுத்திட வேண்டும்

கொழும்பு, வெள்ளி

புதிதாகத் தயாரிக்கப்படும் குடியிருப்பாளர் ஜாபிதாக்களில், வீடுகளிலுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கையெழுத்திட வேண்டியிருக்கும். எனவே, அடுத்த பங்கீட்டரிசிப் புத்தகங்களை விநியோகிக்கு முன் குடியிருப்பாளர் ஜாபிதாவைப் புதுப்பிக்க உணவுமந்திரி தீர்மானித்திருக்கிருர்.

புதிய ஜாபிதாக்களில் எல்லா வீடுகளிலுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும், தாங்கள் கொடுத்திருக்கும் விபரங்கள் சரி என்பதை உறுதிப்படுத்திக் கையெழுத்திட வேண்டும். ஜாபிதாவில் கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்கள் உண்மையானது என்பதற்கு ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பொறுப்பு வகிக்க வேண்டுமென்பதே புதிய பிரகடனத்தின் உத்தேசமாகும். இலங்கைப் பிரஜைகளாய் அல்லாத பாஸ்போர்ட் அல்லது விஸா வைத்திருக்காதவர்கள், பங்கீட்டரிசிப் புத்தகத்துக்கு விண்ணப்பித்தால், இலங்கைக்கு முதலில் எப்போது வந்தார்கள் என்பதை அவர்கள் வெளியிட வேண்டும்.

### ஸ்ரீஸ்கந்தராஜா தலைமை வகிப்பார்

கொழும்பு, வெள்ளி

திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கும் மேற்கு சர்க்யூட் கிரிமினல் செஷனுக்கு அசைஸ் கமிஷனர் திரு பி. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமை வகிப்பார்.

### 1 லட்சம் பெறுமதியான தங்கம் பறிமுதல்

சென்னை, ஜூன் 7

நேற்று சென்னை வந்த கப்பல் பிரயாணி ஒருவரிடமிருந்து ரூ. 1,00,000 பெறுமதியன 893 தோலா தங்கம் கைப்பற்றப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

### அமெரிக்க சாதனை

வாஷிங்டன், ஜூலை 7

அமெரிக்கா கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ராக்கெட் ஒன்றை 9000 மைல் தூரம் செலுத்தி வெற்றி கண்டது. இவ்வளவு தூரம் இதுவரை இந்த அஸ்திரத்தை எவரும் செலுத்தவில்லை எனக் கூறப்பட்டது.

### தமிழ்நாட்டில் என்ஜினியரிங் கல்லூரி

புதுடில்லி, ஜூலை 9

3ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாடு உட்பட பல ராஜ்யங்களில் 7 பிராந்திய என்ஜினியரிங் கல்லூரிகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## விசாவரி காரணமாய் கள் இறக்கும் தொழில் பாதிக்கப்படும்

### "இந்திய தொழிலாளர் நாட்டை விட்டுச் சென்றுவிடுவார்கள்"

— திரு. மெண்டிஸ்

கொழும்பு, வெள்ளி

"விசாவரியின் காரணமாக இந்திய கள் இறக்குமதியாளர்கள் இந்தியாவுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் உள்நாட்டு கள் இறக்குமதியாளர்களின் பற்ருக்குறை காரணமாய் அப்போது கள்ளிறக்கும் தொழில் பாதிக்கப்படும்" என திரு. எம். ஜி. மெண்டிஸ் கூறினுர்,

மகோனையைச் சேர்ந்த கலாமுல்லையில் அகில இலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. மெண்டிஸ் பேசினுர்.

"சாராய வர்த்தகத்திலுள்ள பெரிய லாபத்தை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. இந்திய கள்ளிறக்கும் தொழிலாளர் மீது விசாவரி விதிப்பது அநீதியானது என யூனியன், அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறது. நிதிமந்திரியுடன் நடத்திய ஒரு மகாநாட்டின் காரணமாய் அவர் கள்மீது விதித்துள்ள வரி தற்காலிகமாக கைவிடப்பட்டது. சட்டவிரோத மதுபானத் தயாரிப்பைக் கண்டாவது இந்திய கள்ளிறக்கும் தொழிலாளர் மீதான வரியை அரசாங்கம் நீக்கவேண்டும்" என திரு. மெண்டிஸ் குறிப்பிட்டார்.

## ஒவ்வொரு வட்டாரத்துக்கும் 2000 ம் ரூபாய்

### மாநகரசபை உப வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

நடப்பு வருடத்திற்கு ஒவ்வொருவட்டாரத்துக்கும் ரூபா இரண்டாயிரம் யாழ்ப்பாண மாநகரசபையின் உப வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 1961ம் ஆண்டின் முதலாம் இலக்க உபவரவுசெலவுத் திட்டக் கூட்டம் நேற்று மாலை மேயர் திரு. டி. எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்றது.

ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பணம் ஒதுக்கும் விஷயம் விவாதத்திற்கு வந்தபோது வட்டாரரீதியாகப் பணமொதுக்கவேண்டுமென அங்கத்தவர்களிற் பலர் சுட்டிக்காட்டினர். சபையின் நிதிநிலைமை சீரில்லாமையை மேயர் சுட்டிக்காட்டினுரெனினும் இறுதியில் வட்டாரத்துககு ரூ. 2000 வீதம் ஒதுக்குவதென கவுன்ஸில் தீர்மானித்தது.

திறந்த வெளி அரங்கு, தண்ணீர் விநியோகம், மின்சார உபகரணங்கள், ஒலி உபகரணங்கள், சபைக்கூட்டம் முதலியன அமைப்பதற்கும் அங்கு தேவையான ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும் அடையாள ஏற்பாடாக ரூ. 20,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய சந்தை அமைப்பதற்கு அடையாள ஏற்பாடாக

(5ம் பக்கம் பார்க்க)

### திங்கட்கிழமை ஜெனிவா மகாநாடு

ஜெனிவா, ஜூலை 27

லாவோஸ் சம்பந்தமான ஜெனிவா மகாநாடு வருகிற திங்கட்கிழமை ஆரம்பமாகும்

## வர்த்தகப் பதிவு வரி விதிப்பில் புதிய திருத்தம்

### நிதிமந்திரி ஆலோசனை பேரில் அரசாங்கம் முடிவு

கொழும்பு, வெள்ளி

வர்த்தகப் பகுதி சம்பந்தமான வரி விதிப்பில் திருத்தங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிகிறது. நிதிமந்திரியின் ஆலோசனையின் பேரில், வர்த்தக ஊழியரின் சேமலாப நிதிக்காக, பதிவு செய்யப்படாத வர்த்தகங்களுக்கு மேலதிக வரி விதிப்பதில்லையென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது சம்பந்தமான திருத்த மசோதா விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும். ஊழியரின் சேமலாப நிதியிலிருந்து சேகரிக்கப்பட்ட பணம் அரசாங்கத்தினுல் திருப்பிக் கொடுக்கப்படுமெனத் தெரிகிறது.

### கொழும்பு மேயர் இன்று வருவார்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு மேயர் திரு. முகம்மது தனது வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணத்திலிருந்து இன்று கொழும்பு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கே. எல். எம். ஒப்பந்தத்தை நிறுத்த வேண்டாம்

கொழும்பு, வெள்ளி

எயர்சிலோன் கே. எல். எம். டச்சு விமானக் கம்பனியுடன் செய்துள்ள ஒப்பந்தத்தை நிறுத்திவிட வேண்டாமென்று எயர்சிலோன் உயர்தர ஊழியர்கள் பிரதம மந்திரிக்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

## பாடசாலை விடுதிகளின் நிர்வாகத்தை மததாபனத்திடம் விடக்கூடாது

### கல்வி மந்திரி எச்சரிக்கை

கொழும்பு, வெள்ளி

கல்வி டைரக்டரின் நிர்வாகத்துக்குட்பட்ட பாடசாலைகளின் எல்லைக்குள் இருக்கும் விடுதிகளின் நிர்வாகத்தை, அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்னர் நிர்வகித்த சமய ஸ்தாபனங்களின் பொறுப்பிலோ அன்றி வேறு ஸ்தாபனங்களின் பொறுப்பிலோ விட்டால், அப்பாடசாலை அதிபர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென கல்வி டைரக்டர் எச்சரிக்கை செய்துள்ளார்.

பாடசாலை எல்லைக்கு வெளியேயுள்ள விடுதிகளுக்கு இது விதிவிலக்காயிருக்கும்.

## சாம்ராஜ்ய நாடுகளை கலக்காமல் பிரிட்டன் ஒரு முடிவு செய்யாது

### ஐரோப்பிய பொதுச் சந்தை பற்றி திரு. தோர்னிகிராப்ட்

கொழும்பு, வெள்ளி

ஐரோப்பிய பொதுச் சந்தை விஷயமாக பிரிட்டனுக்கும் இலங்கைக்குமிடையே நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு வழி காணப்பட்டிருக்கிறது.

பிரிட்டிஷ் விமானமந்திரி திரு. தோர்னிகிராப்ட், நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன ஆகியோர் இன்று இவ் விஷயம் பற்றித் தங்கள் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டனர். இன்று வெளியான அறிக்கையில் ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேர்வதுபற்றி மந்திரிகள் பரஸ்பரம்கருத்துப் பரிவர்த்தனை செய்து கொண்டதாயும், இதனுல் ஏற்படும் சாதக பாதகம்பற்றி அவர்கள் ஆராய்ந்ததாயும், இவ் விஷயத்தில் இரு அரசாங்கங்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதென்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஐரோப்பியப் பொதுச் சந்தையில் சேர்வதுபற்றி பிரிட்டன் இன்னும் தீர்மானம் செய்யவில்லை என்றும், எல்லா சாம்ராஜ்ய நாடுகளின் கருத்துக்களையும் அறியாமல் அது ஒரு முடிவு செய்யாதென்றும் பிரிட்டிஷ் விமான மந்திரி திரு. தோர்னிகிராப்ட் தெரிவித்தார்

## திருமண அழைப்பு

**சுந்தரலிங்கம் — பராசக்தி**

சாவகச்சேரி திரு. இ. விரசிங்கம் தம்பதிகளின் மகனும் திரு. க. குமாரவேலு தம்பதிகளின் (ஹாமர்ஸ் அவென்யூ, வெள்ளவத்தை) மருமகனுமாகிய **செல்வன் சுந்தரலிங்கம்** (இலங்கை வானொலி) அவர்களுக்கும், யாழ்ப்பாண சிரும்பியடி திரு. செ. ஐயாத்துரை (இராசையா) தம்பதிகளின் மகளும் திரு. வ. துரையப்பா (கிரூன் ஹோட்டல் யாழ்ப்பாணம்) திருமதி துரையப்பா ஆகியோரின் மருமகளுமாகிய **செல்வி பராசக்தி** (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களுக்கும் 9-7-61 ஞாயிற்றுக்கிழமை காலை 10-30க்கும் 11-30க்குமிடையில் வரும்சுப முகூர்த்தத்தில் யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் கோவிலில் திருமணம் நடைபெறும். அன்பர்களும் உறவினர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.


# நவாலி கொலை வழக்கில் சகோதரன் விடுதலை

## தகப்பனுர் சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு நிற்க உத்தரவு

யாழ்ப்பாணம், சனி

நவாலி கொலை வழக்கில் முதல் எதிரியான அம்பலவாணர் நவரத்தினத்தை சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு நிற்குமாறு யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசு வால்டன் உத்தரவிட்டார். இரண்டாவது எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

நவரத்தினம் அரியபுத்திரன் என்பவரை அடித்துக் கொலை செய்ததாக அரியபுத்திரனின் தகப்பன் அம்பலவாணர் நவரத்தினம் மீதும், அரியபுத்திரனின் சகோதரன் ஞானம் என்றழைக்கப்படும் நவரத்தினம் திருஞானசம்பந்தர் மீதும் குற்றம்சாட்டி ஆனைக்கோட்டைப் பொலிஸைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் திரு. டி. கந்தையா இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

பிராசிக்கியூஷன் தரப்பில் நீதிமன்ற சார்ஜன்ட் திரு. பி. ஏ. பியதாசா ஆஜரானர். திரு. எஸ். வி. கதிரவேலு திரு. வி. நடராஜாவுடன் எதிரிகள் சார்பில் ஆஜரானர்.

அரியபுத்திரனின் தலையில் முதல் எதிரி மொங்கானல் அடித்தபொழுது அவருடன் இரண்டாவது எதிரியும் அதே நோக்கத்தைக் கொண்டிருந்தாரென்பதற்கு சாட்சியங்கள் தெளிவாக்கவில்லையென்று நீதவான் குறிப்பிட்டார். காலஞ்சென்ற வரும் இரண்டாவது எதிரியும் நிலத்தில் விழுந்து போராடிக் கொண்டிருந்த சமயத்தில்தான் முதல் எதிரி மொங்கானல் அடித்ததாக சாட்சியங்கள் தெரிவிக்கின்றன, என்று குறிப்பிட்ட நீதவான் இரண்டாவது எதிரியின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டை சாட்சியங்கள் நிரூபிக்கவில்லை யென்று கூறி, இரண்டாவது எதிரியை விடுதலை செய்தார். இரண்டாவது எதிரி மீது தகுந்த குற்றச்சாட்டு இருந்தால் அவர் மீது குற்றச்சாட்டுத் தாக்கல் செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கலாமென்றும் நீதவான் கூறினர்.

முதல் எதிரியை சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு நிற்குமாறு நீதவான் உத்தரவிட்டார். ஆங்கிலம் பேசும் ஜூரிகள் முன்னிலையில் தம்மை விசாரணை செய்ய வேண்டும் என்று எதிரி கேட்டுக்கொண்டார்.

—

## 'அறிக்கையை வெளியிடவும்'

கொழும்பு, வெள்ளி

திரு. வில்மட் பெரேரா சம்பளக் கமிஷன் அறிக்கையை உடனடியாக வெளியிடும்படி நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவை கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று அரசாங்க சேவை தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேறியது. இத்தீர்மானத்தைத் தந்திமூலம் நிதிமந்திரிக்கு அனுப்புவதென்றும் கமிட்டி தீர்மானித்தது.

## கொள்ளியால் சுட்டவருக்கு 6 மாதக் கடுங்காவல்

கம்பஹா, வெள்ளி

பறகன்டிநியாவைச் சேர்ந்த டி. எம். பிசோ மெனிக்கா என்பவரை நெருப்புக்கொள்ளியொன்றினல் சுட்டதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பபட்ட வழக்கில், அதே கிராமத்தைச் சேர்ந்த 55 வயதான கே. டி. பொடிநோனு என்பவருக்கு கம்பஹா நீதிபதி திரு. எஸ். எஸ். குலதிலா ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

சென்ற பெப்ரவரி மாதம் 5 ந் திகதி பிசோ மெனிக்கா பொடிநோனுவின் வீட்டுக்குச் சென்று தமது வீட்டில் சில நகைகள் களவாடப்பட்டுவிட்டதாகக் கூறிய. அச்சமயத்தில் பொடிநோனு ஆத்திரம் கொண்டு, நெருப்புக்கொள்ளியொன்றினல் சுட்டதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

# பத்தமேனி கொலை வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், சனி

பத்தமேனி கொலைவழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியு. ஸி. முன்னிலையில் பத்தமேனி கொலைவழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ந் திகதி கிட்ணபிள்ளை கந்தசாமி என்பவரைக் கொலைசெய்ததாக சண்முகம் பொன்னுத்துரை என்பவர் மீது குற்றஞ்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முடிக்குரிய வழக்கறிஞர் பிராசிக்கியூஷன் தரப்பில் ஆஜரானர். திரு. டி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரையுடன் திரு. ஏ. சம்பந்தன் எதிரியின் சார்பில் ஆஜரானர். திரு. ஜே. எம். சைமன் எதிரியின் சார்பில் ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

விசாரணை முடிவில் எதிரி குற்றவாளியல்ல வென்று ஜூரிகள் ஏகமானதாகத் தெரிவித்தனர்.

நீதியரசர் சண்முகம் பொன்னுத்துரையை விடுதலைசெய்தார்.


## கேள்வி விளம்பரம்

புலோப்பளைக் கிராமச் சங்க அக்கிராசனரால் கீழ் குறிப்பிட்டிருக்கும் ரோட்டு வேலைகளைச் செய்வதற்கு சீல்வைத்த கேள்விகள் பதிவுத் தபால் மூலம் 29-7-61 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் ரூபா 10,000க்கு குறையாமல் பதிவு உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு வேலைக்கும் ரெண்டர் பிணையாக ரூபா 50 கட்ட வேண்டும். கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 5 கட்ட வேண்டும். இப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது. கேள்விப் பத்திரங்கள் 26-7-61 பகல் 12 மணிவரையும் வளங்கப்படும்.

வேலையின் விபரங்களை இக் கிராமச் சங்கக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்—ஏ. ஜி. இராசசூரியர்
அக்கிராசனர்

புலோப்பளை கிராமச் சங்கம்
பளை 3-7-16

### வேலையின் விபரம்

1. முகாவில் ரோட்டு அமைத்தல்.
2. மாசார் ரோட்டு அமைத்தல்.
3. கச்சாய் வெளி ரோட்டுத் திருத்தம்.
4. கரந்தாய் ரோட்டுத் திருத்தம்.
5. முல்லையடி ரோட்டு அமைத்தல்.
6. சென்ற், பேதுறு சேச் ரோட்டு அமைத்தல்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி: யாழ்ப்பாணம்.

### காணவில்லை

26-6-61 திங்கட்கிழமை பி.ப. 3 மணியிலிருந்து பண்டா அல்லது விஜயசூரியா என்ற கருமை நிறமுடைய, வலது கைப்பெருவிரல் இரண்டுஉள்ள பையனைக் காணவில்லை. போகும்போது கறுப்புக் காற்சட்டையும், கோடு போட்ட சட்டையும் அணிந்திருந்தான். பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இனம் கொடுக்கப்படும். அறிவிக்குமிடம்: M. T. பொன்னம்பலம், 108, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். போன் 380.

### தேவை

சூரியப் பிரகாஸ் பலசரக்கு மாளிகைக்கு இரும்பு வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை. விண்ணப்பிக்கவும். சன்லையிற் டையேஸ் அன் றைக்கிளீனஸ் பஸ் நிலையத்துக்கு அருகாமை; நம்பர் 23, பெரியகடை, யாழ்ப்பாணம்.




கண் சம்பந்தமான வியாதியினல் கஷ்டப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களின் துயரை நீக்கி அவர்களின் நல்வாழ்த்துக்களைப் பெற்றுள்ளோம். ஒரு முறை கலந்தாலோசியுங்கள்!

**மு.க.ஜெகநாதன்**

யூனனி கண் வைத்திய நிபுணர்
பெரியகடை, யாழ்ப்பாணம்

### தேவை

வன்னேரிக்குளம் பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. இதற்கான விண்ணப்பங்கள் கீழ்க் காணப்படும் தராதரமுள்ளவர்களால் 17-7-61க்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

**1. தராதரம்**

(அ) எஸ். எஸ். ஸி. ஆங்கிலம் அல்லது தமிழ் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கணக்கு வைக்கும் முறையிலும் கூட்டுறவுச் சங்க வேலைகளிலும் போதிய அனுபவம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்.

(ஆ) கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றிருப்பவர்களது விண்ணப்பங்களுக்கு விசேட சலுகை காண்பிக்கப்படும்.

**2. வயது**

25 வயதிற்கு மேற்பட்டவராயும் 40 வயதிற்குட்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.

**3. சம்பளம்**

ரூபா 135 | — 200 |
ரூபா 5 × 13
(எல்லாப்படிகளும் உட்பட)

நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய விலாசம், எஸ். எஸ். சபாநாயகம், தலைவர், வன்னேரிக்குளம் ப. நோ. கூ. சங்கம், கூட்டுறவு அலுவலகம், பரந்தன்.

யாழ்ப்பாணத்தில் காணிகள், வீடுகள் மற்றும் அசைவு, அசைவில்லாத பொருட்களை வாங்கவோ விற்கவோ விரும்பினலும் அல்லது ஆதனங்களின் பொறுப்போடு பணம் எடுக்கவோ, கொடுக்கவோ விரும்பினலும் தொடர்பு கொள்ளவும்: N. Arulanantham,
Auctioneer & Broker,
34, Manipay Road, Jaffna.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!!
எவை?

# டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND.

**பவுண் அடையாளம் உள்ள**

அலுமீனியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!
எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

**டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!**

தயாரிக்குமிடம்:

## அலுமீனியம் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்,

மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.

J. D. 3

# "ஐ. நா. வில் அங்கத்துவம் உத்தரவாதமளிக்க வேண்டும்

## அதுவரை பிரிட்டிஷ் படைகளை வெளியேற்ற மாட்டோம்"

—குவாய்த் பிரதிநிதி

நியுயோர்க், ஜுலை 7

குவாய்த் ஐ. நா. வில் அங்கம் வகிப்பதற்கு உத்தரவாதமளிக்கப்படும்வரை பிரிட்டிஷ் படைகளை குவாய்த்திலிருந்து வெளியேறும்படி குவாய்த் அரசாங்கம் கேட்டுக்கொள்ளமாட்டாது என்று ஐ. நா. பாதுகாப்புச்சபையில் குவாய்த்தின் தலைமைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டுள்ள ஜனுப். ஹுசெயின் நேற்றிரவு அறிவித்தார்.

குவாய்த்மீது உரிமை கொண்டாடும் ஈராக்கின் மிரட்டல் நீங்கி, ஐ. நா. சபையில் குவாய்த் அங்கம் வகிப்பதற்கு உத்தரவாதமளிக்கப்படும்வரை குவாய்த்திலிருந்து பிரிட்டிஷ் படைகளை திருப்பி அழைத்துக் கொள்ளும்படி குவாய்த் அரசாங்கம் பிரிட்டனைக் கேட்டுக்கொள்ளாது என்று ஜனுப் ஹுசெயின் தெரிவித்தார்.

குவாய்த் விவகாரம் பற்றி ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்றிரவு மீண்டும்கூடி விவாதித்தது.

குவாய்த்தின் சுதந்திரத்தையும் தேசிய ஒருமைப்பாட்டையும் எல்லாநாடுகளும் மதிக்க வேண்டுமென்றும் குவாய்த் விவகாரத்துக்கு அரபுலீக் எடுக்கும் சமாதான சமரச நடவடிக்கையை எல்லாநாடுகளும் வரவேற்க வேண்டுமென்றும் பிரிட்டிஷ் பிரதிநிதி ஒரு பிரேரணையை பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்துள்ளார்.

## மாற்றம் கூடாது

வாஷிங்டன், ஜுலை 7

உலக நிலைமை காரணமாக அமெரிக்காவின் வெளிநாட்டு உதவித்திட்டங்களில் மாற்றமெதுவும் இருக்கக்கூடாதென்று அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன்றஸ்க் தெரிவித்துள்ளார்.

## வடகொரியா-ரஷ்யா ஒப்பந்தம்

மாஸ்கோ, ஜுலை 7

சோவியத் யூனியனுடன் வடகொரியா பாதுகாப்பு ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது.

பத்து வருடகாலம் இந்த ஒப்பந்தம் அமுலிலிருக்கும்.

இந்த ஒப்பந்தத்தில் சோவியத் யூனியன் சார்பில் பிரதமர் குருஷேவ் கையொப்பமிட்டார்.

வடகொரியா தாக்கப்பட்டால் சோவியத்யூனியன் மீது நடைபெற்ற தாக்குதலாகவே அது கருதப்படும் என்று சோவியத் பிரதமர் குருஷேவ் கூறினர்.

## பாரதத்தின் முன்னேற்றம்

### மொரார்ஜி பெருமிதம்

ஜம்மு, ஜுலை 7

'பாரதம் தனது அபிவிருத்திக்காக வெளிநாடுகளிடமிருந்து கடன் வாங்குவதால் பாரதத்தின் வருங்காலசந்ததியினர் கஷ்டத்துக்குள்ளாக மாட்டார்கள். ஏனெனில் வெளி நாடுகளிடமிருந்து பெறும் கடன்களையும் உதவிகளையும் சரியானமுறையில்பாரதம் உபயோகித்து வருகிறது. இதனால் வருங்காலச் சந்ததியினர் கஷ்டமின்றி வாழமுடியும்'' என்று இந்திய நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் நேற்று இங்கு ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

"பாரதம் துரிதமாக முன்னேற்றமடைந்து வருகின்றது. வெளிநாட்டுஉதவிகளைபாரதம் சரியான முறையில் உபயோகித்து வருவதால் வெளி நாடுகளில் பாரதத்துக்கு மதிப்பு அதிகரித்து வருகிறது" என்று திரு. மொரார்ஜி தேசாய் கூறினர்.

## புதுடில்லியில் பாகிஸ்தான் விமானம்

டாக்கா, ஜுலை 7

டாக்காவிலிருந்து லாகூருக்குச் சென்றுகொண்டிருந்த பாகிஸ்தான் விமானமொன்று எஞ்சின் கோளாறு காரணமாக புதுடில்லி பாலம் விமான நிலையத்தில் இறங்கியது. விமானத்திலிருந்த 62 பிரயாணிகளை லாகூருக்கு ஏற்றிச்செல்வதற்காக மற்றொரு விமானம் கராச்சியிலிருந்து சென்றது.

## தங்கனிக்கா சுதந்திர தினம்

லண்டன், ஜுலை 7

இவ்வருடம் டிசம்பர் மாதம் 9-ம் திகதி தங்கனிக்கா சுதந்திரமடையுமென்று பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு விவகார மந்திரி திரு. மக்லியோட் அறிவித்தார். சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் எடின் பரோகோமகன் கலந்துகொள்வார்.

## பேராசிரியர்ராஜினமா

கொழும்பு, வெள்ளி

வித்தியோதய சர்வகலாசாலையில் அரசியற் பேராசிரியராக பதவிவகித்துவந்த திரு. கே. பி. முக்கர்ஜி தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

## மதகுருமாருக்கு உத்தியோகத் தடை

### புனராலோசனை செய்யப்படும்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்தில் மதகுருமார்களுக்கு உத்தியோகம் கொடுப்பதற்குத் தடை விதிப்பதென்ற அரசாங்கத்தின் தீர்மானம் சம்பந்தமாக புனராலோசனை செய்யப்படவிருக்கிறது.

அரசாங்கத்திலும் அரசாங்க ஆதரவுள்ள ஸ்தாபனங்களிலும் மதகுருமார்கள் உத்தியோகம் பார்ப்பதற்குத் தடை விதிப்பதென்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை அமுல் நடத்துவதால் கஷ்டங்கள் ஏற்படக்கூடுமாவென்பதைச் சகல மத ஸ்தாபனங்களின் தலைவர்களுடனும் கலந்தாலோசித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கலாசார, விவகார, கைத்தொழில், உள்நாட்டு அமைச்சரை அரசாங்கம் கேட்டுள்ளது.

## ஐக்கிய நாணய சங்க ஆண்டுவிழா

உடுப்பிட்டி, வெள்ளி

"1916-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஐக்கியநாணய சங்கம் இன்று ரூபா 10,000க்கு மேற்பட்ட அடக்கப்பணமாக வைத்திருப்பது, மேற்படி சங்கத்தின் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறு இராசவாசல் முதலியார் திரு. கே. சின்னத்தம்பி நேற்று முன்தினம் நடைபெற்ற கரவெட்டி ஐக்கிய நாணய சங்க ஆண்டுவிழாவில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

புதுவருட உத்தியோகஸ்தராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. சீ. கனகசபை, உபதலைவர்: திரு. வீ. கதிரவேலு, காரியதரிசி திரு. சி. சி. செல்லையா, தனாதிகாரி திரு. வி. கனகசபை.

லாவோஸ்—

# இடதுசாரி நடுநிலைமைத் தலைவர்களுக்கு பூன் ஊம் அழைப்பு

வியன்டைன், ஜுலை 7

மிகவிரைவில் கலப்பு அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சி செய்வதற்காக பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு மன்னர் தலைநகரான லுவாங்பிரபாங்கிற்கு உடனடியாக வருமாறு லாவோஸின் இடதுசாரித்தலைவர் இளவரசர் சொவன்னவாங்கையும் நடுநிலைமைத் தலைவரான இளவரசர் சுவன்னபூமாவையும் வலதுசாரித் தலைவர் இளவரசர் பூன்ஊம் அழைத்துள்ளார்.

வலதுசாரி உதவித்தலைவர் ஜெனரல் பூமிநொசாவான் சமீபத்தில் லாவோஸின் மன்னர் சவன்னவத்தனவைச் சந்தித்து கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக சூரிச் மகாநாட்டில் மூன்று இளவரசர்களுக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்ட விபரங்களைத் தெரிவித்தார்.

## அவசரத் தந்தி

### 11 நாட்களாகியும் கிடைக்கவில்லை

கொழும்பு, வெள்ளி

தலைமன்னரில் வழி தவறிய ஒரு யாத்திரீகர் கோஷ்டிக்கு சென்ற 11 நாட்களுக்கு முன்னர் கும்பனி வீதி தபாற் கந்தோரிலிருந்து திரு. எல். ஏ. சைமன் என்பவரால் அனுப்பப்பட்ட ரூ. 50 கொண்ட அவசரத் தந்தி மணியோடர், இன்றுவரை அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை.

இதுபற்றி திரு. சைமன் தெரிவிக்கையில், மடுத் திருவிழாவுக்குச் செல்வதற்காக, தலைமன்னரில் காத்து நின்ற யாத்திரீகர் கோஷ்டியொன்றுக்கு தாம் சென்ற ஜுன் மாதம் 24-ந் திகதி குறித்த தந்தியை அனுப்பியதாயும், இதுபற்றித் தபால் அதிகாரிகளிடம் விசாரித்த சமயம், தந்தி மணியோடரின் நகல் கைதவறிவிட்டதாகக்கூறினரென்றும் அதை அவர்கள் கண்டுபிடிக்கும்வரை தாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டியிருக்கின்றதெனவும் கூறினர்.

## தேங்காய்துருவல் மில்களுக்கு

### ரூ. 20 லட்சம் தேவை

கொழும்பு, வெள்ளி

மூன்று தெங்குப்பொருள் சபையினர் நிதி உதவித் திட்டம் ஒன்றை தமக்கு வகுத்துத் தருமாறு வர்த்தக போக்குவரத்து மந்திரியைக் கேட்டுள்ளனர்.

தேங்காய்த்துருவல் மில்களைத் திருத்தி அமைக்கவே இந்த நிதி கோரியுள்ளார்கள். இங்கிருந்து ஏற்றுமதியாகும் ஒவ்வொரு அந்தர் தேங்காய் துருவலிலும் 35 சதம் அதிகப்படியான வரி விதிக்குமாறும் மந்திரியை அவர்கள் கேட்டுள்ளார்கள். புதுமுறைகளைக் கையாண்டு இதைத் தயாரிக்க சுமார் 20 லட்சம் ரூபா தேவைப்படுமென்று சபையினர் தெரிவித்துள்ளனர்.


பீ. சீ. சீ.

வெகுமதித் திட்டம்

பீ. சீ. சீ. தயாரிப்புச் சவுக்காரங்களின் சித்திரத் தாள் பெட்டிகளையும் சுற்றுத்தாள்களையும் சேர்த்து வைத்து இந்த வெகுமதித் திட்டத்தில் பங்கு பற்றி உங்கள் அதிர்ஷ்டத்தைப் பெறுங்கள்.

★ ஆடவர்கள் முதல் ஆரணங்குகள்வரைபாவிப்பது நறுமணம் கமழும் பீ.சீ.சீ. சந்தண சோப்பே.

பீ. சீ. சீ. சவரின் பார் சோப்

★ சிரமமின்றி உங்கள் துணிகளை வெண்மையாக வெழுக்க இதோ உங்களுக்கு ஓர் அற்புத சலவைச் சோப்.

என்றும் எநநேரமும் பாவிக்க பீ. சீ. சீ. தயாரிப்புக்களை மறவாதீர்கள்

விபரங்களுக்கு:

யாழ்ப்பாணம் ஏஜென்ட்ஸ்

முகம்மது அலி அப்துல் அலி,

பெரியகடை, யாழ்ப்பாணம்.


# கைத்தொழில் அபிவிருத்திக்கு ஆறு கோடி ரூபாய்

கொழும்பு, வெள்ளி

குடிசைக் கைத்தொழில் அபிவிருத்திக்குச் செலவிடுவதற்காக அரசாங்கம் சுமார் ஆறு கோடி ரூபாய் ஒதுக்கவிருக்கிறது.

கைத்தொழிலை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கு முதல் நடவடிக்கையாக கிராமப்புறங்களிலுள்ள பல்வேறு ஸ்தாபனங்களை ஒரே ஸ்தாபனத்தின் கீழ் உடனடியாகக் கொண்டுவரவேண்டுமென்று கைத்தொழில், கலாசார,வீடமைப்பு மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளார்.

மந்திரியின் இத்திட்டத்தின்படி கிராமமுன்னேற்றச் சங்கங்கள், குடிசைக்கைத்தொழில் சங்கங்கள், கெசவாளர் சங்கங்கள் ஆகியவை யாவும் ஒரே ஸ்தாபனத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

கூட்டுறவு அபிவிருத்திச் சங்கங்களுக்கும் இவைபோன்ற இதர சங்கங்களுக்கும் வழங்கப்படும் கடன்தொகையை 25,000 ரூபாவாக உயர்த்த வேண்டுமென்றும் மந்திரி சிபார்சு செய்துள்ளார். இப்பொழுது சங்கங்கள் ஆகக்கூடுதலான தொகையாக 5000 ரூபா தான் கடன் பெறுகின்றன. இச்சிறுதொகை புதிய கைத்தொழில் ஆரம்பிக்க சிறிதும் போதாதென்று மந்திரி கருதுகிறார்.

## அசோகன் நாடகம்

உடுப்பிட்டி, வெள்ளி

கடந்த வெள்ளிக்கிழமை யாலை ஞானசாரியர் கல்லூரியில் 'சாம்ராட் அசோகன்' என்னும் நாடகம் மேற்படி கல்லூரி நாடகக் குழுவினரால் நடித்துக் காண்பிக்கப்பட்டது.

## மணிவாக்கு

எல்லா உலகங்களுக்கும் இன்பத்தையே அளிக்கும் உண்மை பேசுதலே சத்தியம் எனப்படும். அதற்கு மாறுபட்ட பேச்சு அசத்தியம்.

—பாத்ம புராணம்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆனி மீ 24உ (8-7-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## பல்கலைக்கழக மாணவர்கள்

பல்கலைக் கழகத்தின் நோக்கம் வெறும் பட்டதாரிகளை உற்பத்தி செய்வதல்ல. மாணவர்களுக்குக் குறுகிய மனப்பான்மைகள் எதுவுமின்றி அவர்கள் மனம் விசாலமடையவும், நாட்டு நிர்வாகத்தை ஏற்று நடத்தவும் தக்க சூழ்நிலையில் பயிற்சி அளிப்பதேயாகும்.

ஆனால் இலங்கையிலே கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து அமைக்கப்பெற்றுள்ள பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கிடையே குறுகிய கட்சி அரசியலும், வகுப்புவாதமும் பரவக்கூடிய சூழ்நிலை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. இது வருந்தத்தக்கதாவதுடன், பல்கலைக் கழகத்தின் அடிப்படை நோக்கத்துக்கே நேர் மாறானதாகும்.

உதாரணமாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பல தேசாபிமானிகளின் பெயர்களில் 'ஹால்கள்' அமைக்கப் பெற்றுள்ளன. அந்த 'ஹால்களின்' நிர்வாக சபைகளுக்குச் சமீபத்தில் நடந்த தேர்தல்களிலே ஒரு வகுப்புவாதக் கட்சியைச் சேர்ந்த மாணவர்களே அதிக வெற்றி பெற்றதாக ஒரு செய்தி கூறுகின்றது. மாணவர்களுக்கிடையே வகுப்பு, மதம், கட்சி முதலிய குறுகிய வேற்றுமைகள் எதுவுமின்றி, ஒற்றுமையும், ஒத்துழைப்பும் வளர வேண்டியிருக்க அவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளாகப் பிளவுபட்டு, தேர்தல் போட்டிகளில் ஈடுபடுவது, சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கோ, நாட்டின் எதிர்காலத்துக்கோ நல்லதன்று.

அரசியலில் மாணவர்கள் சிரத்தை காட்டவேண்டியது தான். ஆனால் வகுப்புவாத, கட்சி அரசியல், ஒரு பாவமும் அறியாத மாணவர்களின் இளம் மனதிலே வகுப்பு வேற்றுமை முதலிய விஷத்தைப் புகுத்திவிடும். இது பெரிய ஆபத்து. ஆனால் இதுபற்றி மாணவர்மீது குறை கூறுவதற்கில்லை. நாட்டில் மற்றத் தலைவர்கள் காட்டும் வழியையே அவர்களும் பின்பற்றுகின்றார்கள். இதனால் நாட்டின் எதிர்காலம் பாழடையக் கூடும். இவ்வித ஆபத்து ஏற்படாமல் தடுக்க, பல அரசியல் கட்சித் தலைவர்களும் நல்ல வழிகாட்டவேண்டும். பதவி வேட்டை, வகுப்புவாதம் முதலிய நோக்கங்களை விட்டு, விரிந்த மனப்பான்மையுடன், அவர்கள் நாட்டின் நன்மைக்காக ஒத்துழைக்க முற்படவேண்டும். ஆனால் இந்நிலையில் அதை எதிர்பார்ப்பது குதிரைக் கொம்புதான். ஆகவே பல்கலைக்கழக மாணவர்கள் சுயநலமுடைய அரசியல் தலைவர்களைப் பின்பற்றுவதை விட்டு, அந்தந்த "ஹால்கள்" எந்தத் தேசாபிமானிகளின் பெயர்களில் உள்ளனவோ, அவ்வுத்தமர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றவேண்டும். யார் அவ்விதம் செய்கிறார்களோ, அவர்கள் தங்களைக் காத்துக் கொள்வதுடன், தேசாபிமானிகளாக வாழ்ந்து நாட்டுக்கு நற்பணி செய்யத் தங்களைத் தகுதியாக்கிக் கொண்டவராவர்.

# "சைவமே முழுமுதற் சமயம்"

## ஆசிரியர் கூட்டத்தில் திரு. குணசேகரம்

உடுப்பிட்டி, வெள்ளி

"இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகமே உலகின் பழைய நாகரிகமாகும். இங்கு கண்டெடுக்கப்பட்ட சிவனின் விக்கிரகத்திலிருந்து, சைவமே முழுமுதற் சமயமென்பது தெளிவாகும்."

இவ்வாறு முன்னைநாள் மாவட்ட வித்தியாதரிசியும், தமிழ் ஆராய்ச்சியாளருமான திரு. எஸ். ஜே. குணசேகரம் வியாழன்பிற்பகல் உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. குணசேகரம் மேலும் குறிப்பிட்டதாவது:-

உலகிலுள்ள இலக்கியங்கள் அவ்வக்கால மக்களின் இலட்சியங்களையும், அபிலாஷைகளையும் பிரதிபலிக்கின்றன. ஆனால் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தமட்டில், அவை தமிழரின் சமயத்தையும் பிரதிபலிக்கின்றதை எவரும் மறுக்க முடியாது. "ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்" -"யாதும் ஊரே யாவருங்கேளிர்" என்ற சிறந்த இருகோட்பாடுகளையும் தமிழிலக்கியம் பிரதிபலிக்கிறது மேலும், இல்லறம்பற்றி தமிழிலக்கியம் போல வேறெவ்விலக்கியமும் கூறவில்லை. இல்லறவாழ்வு தமிழருக்கே உரித்தானதென்பதனைப் போலும், சிவனரை அர்த்தநாரீஸ்வரரெனக் கூறுகின்றனர்.

திரு. எம். சபாநாயகம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் செயலாளர் திரு. இ.யோகேஸ்வரன் நன்றி தெரிவித்தார்.

## மாதம் ஒன்றுக்கு ரூ. 20 கைதிகள் உழைக்கலாம்

கொழும்பு, ஜூலை 7

சிறைச்சாலைப் பராமரிப்புச் சேவை இலாகா தயாரித்துள்ள புதிய திட்டத்தைத் திறைச்சேரி ஏற்றுக்கொள்ளுமாயின் வருகிற அக்டோபர் வரையில், நீண்டகாலச் சிறைத் தண்டனை அனுபவிப்போர் புதுச் சம்பள விகிதத்தைப் பெறுவர். உள்நாட்டு விவகார அமைச்சு சென்ற மே மாதம் தயாரித்த இத் திட்டத்தைச் திறைச்சேரி அப்படியே வைத்துவிட்டது. மீண்டும் அமுலுக்கு இத் திட்டம் வருமாயின் கைதிகள் மாதம் ஒன்றுக்கு ரூ. 20/- வீதம் உழைக்க முடியும் என்று கருதப்படுகிறது.

1959-ம் ஆண்டு திரு. வி. என். பிள்ளையின் தலைமையில் சிறைச்சாலை இலாகா அனுப்பிய குழுவின் சிபார்சுகளின் படியே இத் திட்டம் கொண்டு வரப்பட்டது. சிறைச்சாலை இலாகாவில் உள்ள ஒருவர் தெரிவித்தபடி, கைதிகள் தமது சம்பளத்தை வங்கியிலோ அல்லது அவரது ஆதரவில் தங்கியிருப்பவரிடமோ கொடுக்கலாம். கிடைக்கும் பணத்தில் அரைவாசியே சேமிப்பில்போடலாம்.

## சீனவின் உதவித்திட்டத்தின் கீழ் இலங்கைக்கு ரயில் வண்டிகள்

கொழும்பு, வெள்ளி

மக்கள் சீன அரசாங்கத்தின் வெளிநாட்டு உதவித்திட்டத்தின் கீழ், சீனவிடமிருந்து ரயில் பெட்டிகள், கோச் வண்டிகள், சாமான் பெட்டிகள் வாங்குவதற்கு உத்தேச உபமான்ய செலவாக, 1000 ரூபாய் ஒதுக்கித் தருமாறு அரசாங்கத்தை புகையிரத இலாகா கேட்டிருக்கிறது.

இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். இராஜேந்திராவும், இலங்கைப் புகையிரதப் பகுதி ஜெனரல் மனேஜர் திரு. பி. டி. ரம்பாலாவும் சீன சென்றுள்ளார்கள். சீனவிலுள்ள ஒரு கார்ப்பரேஷனுடன் முன்னர் செய்துள்ள உடன்படிக்கைகளை யொட்டி இவர்கள் பூரண பேச்சுவார்த்தைகள் நடாத்திவருவார்கள். அபிவிருத்திக் கடன்நிதியின் கீழ் அமெரிக்கா இவ்வருடம் நீராவியாலியங்கும் ஐந்து ரயில் வண்டிகளை இலங்கைக்கு அனுப்புமென ரெயில்வே அதிகாரியொருவர் அறிவித்துள்ளார்.

கொழும்புத் திட்டத்தின் கீழ் கனடா 2டீசல் வண்டிகளை இவ்வாண்டு அனுப்பிவைக்கும். சீன அரசாங்கத்துடன் முக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்தி முடியும்போது ரயில்வே சேவைகளில் பல திருத்தங்கள் ஏற்பட்டுவிடும் என அந்த ரயில்வே அதிகாரி கூறினர்.

## உபகாரச் சம்பளத்தில் செல்வதற்கும் சிங்களம் வேண்டும்

கொழும்பு, வெள்ளி

வெளிநாடுகளால் வழங்கப்படும் உபகாரச் சம்பளம் பெற்று பயிற்சி பெறுவதற்காக அங்கு செல்லும் சகல அரசாங்க ஊழியர்களும், தொழில்நுட்ப உத்தியோகஸ்தராக இருந்தாலும், இல்லாவிடினும் சிங்கள மொழியில் ஜே. எஸ். ஸி. வரையாவது தராதரம் பெறவேண்டும். சிங்களத்தில் தராதரம் பெறுத தொழில்நுடப உத்தியோகஸ்தர் 1964-ம் ஆண்டில் சிங்களத்தில் தராதரம பெறுவதாக அரசாங்கத்தின் ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும்.

நில அளவை சுப்றின்டெண்ட் ஒருவர் இவ்வித ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுத்ததால் இந்த சலுகை அளிக்க மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## அல்ஜீரியாவில் சிறு சமபவங்கள்

அல்ஜியர்ஸ், ஜூலை 7

அல்ஜீரியாவைப் பிரிவினை செய்யும் உத்தேசத்தை எதிர்த்து ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்த அல்ஜீரியதேசிவாதிகள் நேற்று வேலைக்குத்திரும்பினர். நேற்றுமுன்தினம் நடைபெற்ற கைகலப்பின் எதிரொலியாக நேற்றும் சில இடங்களில் சிறு சிறு சம்பவங்கள் நிகழ்ந்தன.

## இரத்தினக் கம்பளம்

# வீட்டுக்கு பாரம்!

பதுமன்

மண்ணுக்கு மரம் பாரமுமில்லை, கொடிக்குக் காய் பாரமுமில்லை. பெற்றெடுத்த தாய்க்குப் பிள்ளை பாரமில்லை யென நாடோடியாகச் சொல்வார்கள். ஆனால் இந்நாட்களில் எஸ். எஸ். ஸி. பரீட்சையிற் சித்தி எய்தியுள்ளவர்கள் படிப்பு வாசனையே அறியாத பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும் வீட்டில் பாரமாய் இருக்கின்றனர் எனக் கருத்துறையில் நடைபெற்ற மாம்பழ வாரவிழாவில் மதிப்புமிகக ஆசிரியர் ஒருவர் பேசியிருக்கின்றார். சுவையான மாம்பழத்தின் இனிமையைப் பற்றிப் பேசவேண்டியவர் இப்படிக் கசப்பாகப் பேசிய தன் காரணம்தான் என்ன? அந்த நாட்களில் ஆறும், ஏழாம் வகுப்பை முடித்துக் கொண்டு வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் இன்று போதியளவு சம்பாதித்துச் சௌகரியமாக வாழ்கின்றனர்.

ஆனல், படித்துப் பட்டம் பெற்ற இவர்களின் பிள்ளைகளும் சகோதரர்களும், இந்நாட்களில் வேலைகள் எதுவுமின்றி வீட்டில் இருக்கின்றார்கள். இவர்களுக்கு உடு புடவை, சாப்பாடு எல்லாம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் வீட்டுக்காரர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

### பிழையான கல்வி

இவற்றை எல்லாம் எடுத்துககூறிய அந்த ஆசிரியர், இக்காலக் கல்வித் திட்டம் நாட்டின் தேவைகளுக்கு ஏற்றதாயில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கின்றார். எஸ். எஸ். ஸி. பாஸ் செய்துவிட்டு ஐந்து ரூபாய்க்கு ஒருவர் தவண்டையடிக்கையில், கள்ளிறக்கும் இந்தியத் தொழிலாளர் ஒருவர் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் சம்பாதிப்பதை அவர் குறிப்பிட்டுச் சிங்கள மக்கள் தொழில் துறைகளில் ஈடுபட்டு உழைக்க வேண்டிய தன் அவசியத்தை வற்புறுத்துகின்றார்.

### இக்கால மங்கையர்

அத்துடன் அவர் கூறிய இன்னுமொரு காரியத்தை இங்கு எழுதாதிருக்க முடியவல்லை. "இந்நாட்களில் மரம் ஏறுபவர்களை எந்தப் பெண்கள கல்யாணம் செய்ய முன் வருவார்கள்! மாப்பிள்ளைகள் தேவையெனப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யும் இள மங்கையர்கள் கூட, காற்சட்டை அணியும் ஆடவர்களே மணுச்செய்ய வேண்டுமெனக் குறிப்பிடும்போது, எங்கள் நாட்டின் நிலையை உணர்ந்து கவலைப்பட வேண்டியிருக்கிறதே" என அவர் கூறியதைத் தான் இங்கு குறிப்பிடுகின்றேன்.

### பிக்குவின் கவலை

எதிரிகளிடமிருந்து தப்பிக் கொள்வதற்காக அந்தக் காலத்தில் பௌத்த பிக்குகள் விகாரைகளை விட்டுக் காட்டுக்குள் சென்றனராம். இலங்கைச் சரித்திரமே இதற்குச் சான்று பகரும் என கல்கமுவாவில் பிக்கு ஒருவர் பேசியிருக்கிறார். அந்த நிலை, இப்போது இன்றைய அரசாங்கத்தின் மூலம் மீண்டும் ஏற்பட்டிருக்கின்றதென அவர் கவலைப் படுகின்றார். துறவிகள் எதற்காகக் கவலையுறவேண்டும். அவர்களுக்கு இன்பமும் துன்பமும் ஒன்றுதானே!

### 'தமிழின்பம்'

'தமிழின்பம்' அரசியற் கலப்பற்ற இலக்கியப் பொழுது போக்கு இதழாகவே தொடர்ந்து மலரும் என அதன் டைரக்டர் திரு. நா. இரத்தினசபாபதி தெரிவிக்கின்றார். ஆம், இரண்டாவது ஆண்டை ஆரம்பிக்கும் இச் செந்தமிழ்த் திங்கள் இதழ் கண் கவர்வனப்புடன் வெளியாகியுள்ளது. நிர்வாக ஆசிரியர் திரு. எஸ். டி. சிவநாயகத்தின் தலைமையில் இவ்வெளியீடு சிறப்புறுமென்பதற்கு சந்தேகமில்லை. அவருடைய பத்திரிகை அனுபவத்தையும் எழுத்தாற்றலையும் ஈழமும் தமிழகமும் நன்கறியும்.

## ஐயாறன் எழுதுவது

விம்பிள்டனில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் பந்தயத்தில், 'செமிபைனல்ஸ்' ஆட்டத்தில் கிருஷ்ணன் தோற்ருர் என்ற செய்தியைப் பார்த்ததும் என்னைப்போல் பலருக்கும் ஏமாற்றமாக இருந்திருக்கும்.

தமிழ் நாட்டைச் சேர்ந்தவரான ராமநாதன் கிருஷ்ணன் சென்ற வருடத்திலும் இதே பந்தயத்தில் 'செமிபைனல்ஸ்' வரை வந்து நின்றுவிட்டார். உலக டென்னிஸ் வீரர்களுள் அவரை ஏழாவதாகக் கணித்திருந்தார்கள். ஆனல் 'செமிபைனல்ஸ்' வரை மீண்டும் வந்துவிட்டதால் அவர் உலகிலே டென்னிஸ் ஆட்டத்தில் 4-வது ஸ்தானம் வகிக்கிருரென்று கொள்ளலாம்.

இதுவும் சாதாரண விஷயமல்ல. ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் இவ்வித பந்தய வீரர்களுக்கு அரசாங்கம் பலவித வசதிகளையும், உதவிகளையும் அளிக்கின்றது. ஆனல் இலங்கை, இந்தியா இந்நாடுகளில் அரசாங்கம் எவ்வித உதவிகளையும் செய்வதில்லை. அப்படியிருந்தும் கிருஷ்ணன் நான்காவது ஸ்தானத்தைப் பெற்றுள்ளது பெரியகாரியம். இதற்காக அவரைப்பாராட்ட வேண்டும்.

ஃ ஃ ஃ

கிருஷ்ணனின் தகப்பனரான ராமநாதன், டென்னிஸ் ஆட்டத்தில் திறமைபெற்று பல பந்தயங்களில் வெற்றி பெற்றிருக்கின்ருர். தகப்பனரிடம் பெற்ற பயிற்சியே கிருஷ்ணன் இவ்வளவு தூரம் முன்னுக்கு வரப்பெரிதும்உதவியாக இருந்துள்ளது. தகப்பனரையே குருவாகக்கொண்டு அவரிடம் பயிற்சி பெறுகிறவர்கள் அதிர்ஷ்டசாலிகள். சங்கீதம், கைத்தொழில் இவற்றிலே தகப்பனரிடம் பயிற்சி பெற்றவர்களில் சிலர் முன்னணிக்கு வந்துள்ளதை நானறிவேன்.

ஆனல் தகப்பனர் செய்யும் தொழிலை மகன் செய்வது இழுக்கென்றும், அதை விட்டுவிட்டு வேறு ஏதாவது தொழில் செய்வதே மேலென்றும், பலர்நினைக்கும் காலமிது. என்ன செய்யலாம்!

ஃ ஃ ஃ

சைவ உணவு சாப்பிட்டால் உடல் வளர்ச்சியடையாதென்றும், மாமிசம் சாப்பிட்டாலே தேகத்தில் நல்ல பலமிருக்குமென்றும் ஆகவே பல பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு மாமிசஉணவேஅளிக்க ஒழுங்கு செய்யவேண்டுமென்றும் முன்னர் பிரமுகர் ஒருவர் கூறினர்.

ஆனல் டென்னிஸ் ஆட்டத்தில் உலகிலேயே நான்காவதாக வந்துள்ள கிருஷ்ணன், சைவ உணவே சாப்பிடுபவர். டென்னிஸ் ஆட்டத்துக்கு, கைகால்கள் நல்ல தெம்புடன் இருப்பதுடன், உடலும் நல்ல வலிமையானதாக இருக்க வேண்டும். சைவ உணவு சாப்பிடும் கிருஷ்ணனுக்கு உடல் வலிமை மேலானதாகவே இருப்பதால், சைவ உணவு மோசமானதென்றே, உடல் வலிமை கொடாதென்றே கூற முடியாது. இலைதழைகளையே உண்ணும் யானை, மற்ற மிருகங்களுக்கு வலிமையில் குறைந்ததல்லவென்பதையும் பார்க்கின்றோம்.

உணவு ஒவ்வொருவருடைய பழக்கத்தையும், வசதியையும் பொறுத்தது. தேகவலிமை உணவுப் பழக்கத்தைப் பொறுத்ததல்ல. இருவகை உணவு சாப்பிடுகிறவர்களிலும் வலியவர்களும், பலவீனர்களும் உள்ளதைப்பார்க்கிறோம். அதனல் உடல் வலிமைக்கும் சுகத்துக்கும், உணவைத்தவிர வேறுகாரணமு மிருக்கவேண்டுமல்லவா?

# தமிழ்நாட்டில் காவிரியும், கொள்ளிடமும்

## கரை புரண்டோடுகின்றன

### மக்களை வெளியேற்ற விமானப்படை உதவி

புதுடில்லி, ஜூலை 7

**ஒருபோதுமில்லாத அளவுக்கு தமிழ் நாட்டில் காவிரி நதி பெருக்கெடுத்ததாயும், பல இடங்களிலும் வெள்ளத்தினால் உடைப்பு ஏற்பட்டிருப்பதாயும் சென்னையில் அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினார்.**

கிருண்ட் அணைக் கட்டுக்கு கீழே உடைப்பு ஏற்பட்டிருப்பதாயும் கொள்ளிடத்திலிருந்து வெள்ளம் காவிரிக்குப் பாய்வதாயும், இவ்வளவு பெரிய வெள்ளம் ஒருபோதும் ஏற்படவில்லை என்றும் விநாடிக்கு 5 லட்சம் கனஅடி தண்ணீர் அதிலிருந்து வெளியே பாய்ந்து கொண்டிருப்பதாயும் அவர் மேலும் அறிவித்தார. 1924-ம் ஆண்டு ஏற்பட்ட ஒரு வெள்ளப் பெருக்கின்போது விநாடிக்கு 3,71,000 கனஅடி தண்ணீர் மட்டுமே வெளியில் பாய்ந்ததாம்.

அதற்குப்பின் ஏற்பட்ட அதைவிடப் பெரிய இந்த வெள்ளப் பெருக்கினால் மேல் அணைக்கட்டிலும், திருச்சியிலும் நீர்மட்டம் மிகவும் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது.

இந்த அபாயத்திலிருந்து மக்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விமானங்களைக் கொடுத்து உதவும்படி இந்திய விமானப்படை கோரப்பட்டிருக்கிறது.

கிருண்ட் அணைக் கட்டிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் 20 அடிக்கு உடைப்பு எடுத்துள்ளது. ஏராளமான நெல் வயல்கள் நீரில் மூழ்கின. பவானியில் தெருக்களில் முழங்கால் அளவு நீர் இருப்பதாயும், 100 குடிசைகள் தாழ்ந்த பிரதேசங்களில் மூழ்கிவிட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

கோழிக் கோட்டில் வெள்ளம் வடிய ஆரம்பித்துவிட்டது. வெள்ளப் பிரதேசத்தில் மத்திய மந்திரி திரு. ஹபீஸ் முகம்மது இப்ராஹீமும், அவரது துணை மந்திரியும் விஜயம் செய்தனர்.

வெள்ள அகதிகளுக்கு உதவும் பொருட்டு பிரதம மந்திரி நேரு, தனது நிவாரணநிதிலியிருந்து ரூ. 50,000 ராஜ்ய முதன் மந்திரிக்கு அனுப்பியுள்ளார்.

ஒரிஸாவில் பிராமனி, மகாநதி ஆகியவற்றிலும் பெருக்கெத்டுதிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

### பிரிவுபசாரவிருந்து

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறை சனசமூக நிலைய உபகாரியதரிசியாகக் கடமையாற்றிய திரு. எவ். எஸ். நீக்கிலஸ், மேல்படிப்புக்காக இங்கிலாந்து போவது காரணமாக, அவருக்கு சமீபத்தில் பிரிவுபசாரமளிக்கப்பட்டது.

### ஒவ்வொரு வட்டாரத்துக்கும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூ. 10,000 ஒதுக்கப்படுவதை திரு. ஏ.ஜி. இராசசூரியர், திரு எம். யேக்கப், ஹாஜி வி. எம். எம். அபுசாலி ஆகியோர் எதிர்த்தனரெனினும் பெரும்பாலான அங்கத்தவர்களது ஆதரவைப்பெற்று இவ்விஷயம் நிறைவேற்றப்பட்டது.

மாநகரசபைக்குச் சொந்தமாக ஓர் அச்சுக்கூடத்தை அமைப்பதற்கு அடையாள ஏற்பாடாக ரூபாய் 3,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

'உத்தர தேவியின் சேவை நிறுத்தப்பட்டதால் இலங்கையெங்கணுமுள்ள பிரயாணிகளும், குறிப்பாக யாழ்ப்பாணத்துப் பிரயாணிகளும் பெரும் தொல்லைகளுக்கும் துன்பத்துக்கும் உள்ளாகியுள்ளனரென்றும் ஆகையால் "உத்தரதேவியின்" சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உடனடியானநடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று பிரதம மந்திரியையும் போக்குவரத்து மராமத்து மந்திரியையும் கேட்டுக்கொள்வதாகவும் கூறும் குவாஜி எம். எம். சுல்தானின் பிரேரணை ஒன்றைச் சபை ஏகமனதாய் நிறைவேற்றியது.

யடபகுதியில் போதிய பஸ் இல்லாமல் பிரயாணிகள் கஷ்டப்படுவதினால் கூடுதலான பஸ்களை அனுப்பி வைக்க வேண்டுமென அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதென திரு. ஆ. துரைராசசிங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது

கடந்த பலகாலமாக திருத்தப்படாமல் இருக்கும் உப்பாற்றுப்பாலத்தை போக்குவரத்துச் செய்யக்கூடியதாகத் திருத்தித்தரவேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கத்தின் பிரேரணை அங்கு தீர்மானிக்கப்பட்டது.

### திராவக வீச்சுக்கு ஒருவர் பலி

கொழும்பு, வெள்ளி

பதுருளலியா என்ற இடத்தில் திராவகம் வீசப்பட்டதன் காரணமாய் ஒருவர்மாண்டார். நால்வர் படுகாயமடைந்தனர். வீசியவர் யார் எனத் தெரியவில்லை. பொலிசார் புலன்விசாரணைசெய்துவருகின்றனர்.

---

### 'கைத்தொழில் வழிகாட்டி'

கொழும்பு, வெள்ளி

கைத்தொழில் அமைச்சின் அபிவிருத்திப் பகுதி 'கைத்தொழில் வழிகாட்டி' என்ற பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறது. மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா இதற்கு முகவுரை எழுதியிருக்கிறார்.

---

### கார்ப்பரேஷன்களின் இணைப்பு

கொழும்பு, வெள்ளி

அரசாங்க உதவியுடன் இயங்கும் கார்ப்பரேஷன் வேலைகளை ஒருமுகப்படுத்தி, கார்ப்பரேஷன் சபைகளின் கடமைகளை இணைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் இப்புதிய தீர்மானத்தின்படி பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையையும், உப்புக் கர்ரப்பரேஷனும் ஒன்ருக இணைக்கப்படும். தோல் உற்பத்தி, கடதாசிமட்டை, ஒட்டுப்பலகை கார்ப்பரேஷன்கள் மற்றொரு சபையின் கீழ் இணைக்கப்பட இருக்கின்றன.

விம்பிள்டன் டென்னிஸ்

### லேவர் வென்றார்!

லண்டன், ஜூலை 7

இன்று நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் ஒற்றையர் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆர். லேவர், அமெரிக்காவைச் சேர்ந்த மெக்கின்லியைத் தோற்கடித்து விம்பிள்டன் சாம்பியன் ஷிப்பை சுவீகரித்துக்கொண்டார். ஸ்கோர்: 6—3, 6—1, 6—4. லேவர், சென்றஆட்டத்தில்கிருஷ்ணனை 6-2,8—6, 6—2 புள்ளிகளால் தோற்கடித்ததை ரசிகர்கள் அறிவார்கள்.

---

கிரிக்கெட்

### இங்கிலாந்து முன்னேறுகிறது

#### 4 விக்கெட்டுக்கு 238 ரன்கள்

லண்டன், ஜூலை 7

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெற்றுவரும் 3 வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து இன்றைய ஆட்ட முடிவில் 4 விக்கெட் நஷ்டத்திற்கு 238 ரன்கள் எடுத்தது. கவுட்ரி (செஞ்சரிக்கு 7 ரன்கள் குறைவாக) 93 ரன்கள் எடுத்தார். பேரிங்டனும். டெக்ஸ்டரும் தொடர்ந்து விளையாடிக்கொண்டிருக்கின்றனர்.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 237 ரன்கள் எடுத்து அவுட்டானது. இங்கிலாந்து கையில் இன்னும் 6 விக்கெட்டுகளுடன், இன்றுவரை 1 ரன் அதிகப்படியாக எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

---

வாஷிங்டன், ஜூலை 7

ஐ. நா. வில் சீனவைச் சேர்ப்பதுசம்பந்தமாக அமெரிக்கா பரிசீலனை செய்துவரும் விஷயம் இங்கு ஊர்ஜிதம் செய்யப்பட்டது. ஆனல் கோமிண்டாங் சீனவுக்கு ஐ. நா. விலும், பாதுகாப்புச் சபையிலும் ஸ்தானம் இருக்கவேண்டுமென்பது அமெரிக்காவின் கட்சியாகும்.

# யாழ்ப்பாணத்தில் வாசனைத் தீன் புகையிலை உற்பத்தி

### யாழ் - மலையாளம் புகையிலை விற்பனவு சங்கம் முயற்சி எடுக்கும்

யாழ்ப்பாணம், சனி

**இந்தியாவில் தயாரிக்கப்படுவது போன்ற வாசனைத் தீன்புகையிலையை யாழ்ப்பாணத்தில்உற்பத்தி செய்வதில் யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை விற்பனவுச் சங்கம் மிகவிரைவில் ஈடுபடுமெனத்தெரிகிறது. இம்முயற்சி மேற்கொள்ளப்படுமானல் யாழ்ப்பாணக் கமக்காரர்கள் தொடர்ந்தும் புகையிலையை உற்பத்தி செய்வதில் ஈடுபட வாய்ப்பளிக்குமெனக் கூறப்படுகிறது.**

இந்த வருடத்துடன் மலையாளப் புகையிலை உற்பத்தி செய்வதை நிறுத்த வேண்டியுள்ள நிலையில் இம்முயற்சி கமக்காரர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமையுமென்றும் வாசனையுள்ள தீன்புகையிலையை இங்கு உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை இச்சங்கம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிகிறது.

#### சங்க நிர்வாகிகள் சுற்றுப்பிரயாணம்

யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை விற்பனவுச் சங்கத்தின் 15 நிர்வாக சபை அங்கத்தவர்களும் இலங்கையின் பல்வேறு புகையிலைச் சுருட்டுத் தொழிற்சாலைகளையும் பார்வையிட்டுத் தெரிந்து கொள்வதற்காக ஓர் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்ள முடிவு செய்திருக்கிருர்கள். இவர்கள் இம்மாதம் 22-ந் திகதி இப்பிரயாணத்தை மேற்கொள்வார்களெனத் தெரிகிறது.

தென்னிலங்கையிலிருக்கும் சுருட்டுத் தொழிற்சாலைகள் பலவற்றையும் பார்வையிட்டு இச்சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சுருட்டுத்தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதே இப்பிரயாணத்தின் பிரதான நோக்கம் எனச்சொல்லப்படுகிறது. இங்கு நடைபெற்றுவரும் சுருட்டுத்தொழிலை அபிவிருத்தி செய்வதில் நிர்வாக சபை அங்கத்தவர்கள் சிலர் அவநம்பிக்கை கொண்டிருப்பதனல் இச்சுற்றுப் பிரயாணத்தின்மூலம் அவர்களின் முழு ஒத்தாசையையும் பெறுவதும் இப்பிரயாணத்தின் ஒரு நோக்கம்.

#### ஐரோப்பாவில் நமது சுருட்டு

மேல்நாட்டுக்கு ஏற்றவகையில் உயர்தர சுருட்டை உற்பத்தி செய்வதில் இச்சங்கம் ஈடுபட்டிருப்பது அறிந்ததே இந்த வகை சுருட்டுத் தொழிலில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்காலத்திலேயே நாளொன்றுக்கு 8000 சுருட்டு விதம் உற்பத்தி செய்யப்படுகிறது. 53,000சுருட்டுகள் இருப்பாக இப்பொழுது உள்ளன. பல தினிசுகளிலும் இவை இருக்கின்றன. ஆனல் விற்பனை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. பயிற்சிக் காலத்தில் இருக்கும் இந்த உற்பத்தித் தொகை சில மாதங்களில் இரட்டிப்பாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்தாண்டில் வெளிநாட்டுக்குஇச்சுருட்டுகள் பரீட்சார்த்தமாக அனுப்பப்படலாமெனத் தெரிகிறது.

ஐரோப்பிய நாடுகளில் இச்சுருட்டுக்கு, சந்தையைக்கண்டுபிடிப்பதிலும், இதற்கான அபிவிருத்திகளை அங்கு ஆராய்வதிலும் இச்சங்கம் இப்பொழுது ஈடுபட்டுள்ளது. இவற்றை விரிவான முறையில், நேரில் ஆராய்வதற்காக இச்சங்கத் தலைவர் திரு. ஆர். வி. எஸ். குக் இன்னும் சில மாதங்களில் ஐரோப்பாவுக்குச் செல்லுவாரெனத் தெரிகிறது.

#### மலையாளத்துக்கு ஏற்ற புகையிலை

மலையாளத்துக்கு எற்றமாதிரியாக உலர்த்தப்பட்ட புகையிலையை மாத்திரம் கொள்வனவு செய்வதென்று யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலை விற்பனவுச் சங்கம் முடிவு செய்துள்ளது. கடந்த சில நாட்களாகப் புகையிலைக் கொள்வனவு செய்வதைத் தற்காலிகமாக நிறுத்திவைத்திருந்த இச்சங்கம் மீண்டும் புகையிலையை இப்பொழுது கொள்வனவு செய்வதில் ஈடுபட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மலையாளப் புகையிலைக் கோட்டா நீடிக்கப்பட்டதான முடிவு வெளிவர முன்பு புகையிலையை உள்ளூர் உபயோகத்துக்கு ஏற்றமாதிரியாக உலர்த்தியவர்களும் சங்கத்தில் தமது புகையிலையை விற்பனைக்குக் கொண்டு சென்றனர் இதனல் 770 கண்டி மலையாளப் புகையிலையை இங்குபெற்றுக்கொள்ள முடியுமா என்பதுபற்றி இச்சங்கம் கடந்த புதன்கிழமை ஆராய்ந்தது. உலர்த்தப்பட்டிருக்கும் புகையிலையை மலையாளத்துக்கு ஏற்றமாதிரி உலர்த்தினலே தேவைப்படும் புகையிலையைப் பெற்றுக்கொள்ளலாமென அங்கு முடிவு தெரிவிக்கப்பட்டபடியால், மலையாளத்துக்கேற்றமாதிரி உலர்த்தப்பட்ட புகையிலையையே கொள்வனவு செய்வதென அங்கு முடிவுசெய்யப்பட்டது.

துறைமுகத்தில் நிற்கும்போது

# கப்பல்களிலுள்ள கடைகள் மூடப்பட வேண்டும்

### ஏஜெண்டுகளுக்கு சுங்க அதிகாரிகள் உத்தரவு

கொழும்பு, வெள்ளி

கொழும்புத் துறைமுகத்தில் கப்பல்கள் நிற்கும்போது அவற்றிலுள்ள கடைகளும், பாபர் சலூன்களும் மூடப்பட வேண்டுமென்ற விதியைச் சீக்கிரம் கடைப்பிடிக்க வேண்டுமென சுங்க அதிகாரிகள், கப்பல் ஏஜெண்டுகளுக்கு அறிவித்துள்ளனர். கப்பலுக்கு விஜயம் செய்பவர்களுக்குப் பல பொருட்கள் விற்கப்படுவதாய் புகார் கூறப்பட்டதைத் தொடர்ந்து இவ்விதம் உத்தரவிடப்பட்டது.

### மோட்டார் சைக்கிள் மோதி சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், சனி

கலால் இன்ஸ்பெக்டர் திரு. டி. ஜே. என். செல்வத்துரையின் வேலைக்காரப் பையனை உதுமான் லெப்பை சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது ஆஸ்பத்திரி வீதியும் கோயில் வீதியும் சந்திக்கும் சந்தியில் மோட்டார் சைக்கிள் ஒன்றினல் மோதப்பட்டு இறந்தார்.

விபத்து நிகழ்ந்த சிறிது நேரத்தில் லெப்பை யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனல் அவர் இறந்து விட்டதாகக் காணப்பட்டார்.

அனந்தன் வடலியைச் சேர்ந்த சிலுவைமுத்து அந்தோனிச்சாமி என்ற மோட்டார் சைக்கிள் சாரதியும் மோட்டார் சைக்கிளின் பின்னல் சென்ற ஆர். சின்னப்புவும் சிறுகாயங்களுடன் தப்பினர்கள்.

வாகனப் போக்குவரத்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். டி ஜே. பீற்றர், சார்ஜண்டுகள், திரு. கே. குணரத்தினம், திரு. எம். போதிசேன ஆகியோர் இதுபற்றி விசாரணை நடத்திவருகின்றனர்.

மோட்டார் சைக்கிள் சாரதியும் பின்னல் சென்றவரும் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# மாணவர் மலர்

## தீமை விளைக்கும் பூச்சிகள்

—'மகான்'—

உருவத்திலே சிறியதாகவிருந்தாலும், ஊசி ஏற்றுவதில் டாக்டர்களின் ஊசியையும் மிஞ்சியது நுளம்பு. மக்களின் இரத்தத்தை உறிஞ்சி வாழ்வது மட்டுமின்றி கொடிய நோய்களையும் இது பரப்பிவிடுகின்றது. நுளம்பில் 2,000 இனங்கள் உள. இவைகளால் பரவும் வியாதிகள் மலேரியா, மஞ்சள் காய்ச்சல், யானைக்கால் போன்றவைகளாகும். இப்படியான கொடிய வியாதிகளைப் பரப்பும் இப்பூச்சிகளை ஒழிக்க டி. டி. ரி. பயன்படுத்தப்படுகிறது.

மேசை மீது நமக்காக, நம் வரவை எதிர்பார்த்துக் கிடக்கும் பலவித உணவுகளிலும், நம்மால் புறக்கணிக்கப்பட்ட, நம்மைவிட்டு விலகி நிற்கும் குப்பை கூளங்களிலும் நடமாடித் திரியும் மற்றுமொரு பூச்சிதான், நம் வீடுகளில் மலிந்து கிடக்கும் ஈ! குப்பை கூளங்களில் கிடக்கின்ற கிருமிகளை மனித உணவில் சேர்க்கும், தீமையுள்ள ஈயினால் 'டைபொய்ட்', வயிற்றுளைச்சல், காலரா போன்ற வியாதிகள் பரவுகின்றன. இப்பூச்சிகளைக் கொல்வதற்கு 'குளோடேன்', 'லின்டேன்' போன்ற மருந்துகள் உபயோகமாகின்றன.

நம்கண்முன்னே தாவித்தாவிப் பறந்து திரியும் வெட்டுக்கிளிகளும், தீமை தரும் பூச்சிகள் தான் என்ருல் சிலர் ஆச்சரியப் படுவார்கள் என்பதும் உண்மைதான். இவ்வெட்டுக்கிளிகள் பெரும் படையாகத் திரண்டு வந்து பயிர்களை நாசம் செய்கின்றன. இவை கூட்டமாக வரும்பொழுது கரிய மேகம் ஒன்று நகர்ந்து வருவதைப்போல் இருக்கும். பெரும் போருக்குச் செல்லும் வீரர்களைப் போன்று படைபடையாக வரும் வெட்டுக் கிளிகள், சில மணி நேரத்தில் ஒரு பெரிய வயலிலுள்ள பயிர்களனைத்தையும் மோசம் செய்து விடும். இவற்றை அழிப்பதற்கு விமானங்களும் உபயோகமாகின்றன. 'அல்றின்', 'குளோடேன்' போன்ற மருந்துகளாலும் இவற்றை அழித்துவிடலாம்.

மரங்களைத் துளைப்பதற்கு ஆயுதங்கள் பயன்படுகின்றன. நாம் உபயோகிக்கும் ஆயுதங்களின் வலிமையை ஒத்த பலவிதமான பூச்சிகளில், நம் வீட்டில் நமக்குத் தெரியாமல் நமதறைக்குள் மறைந்துவாழும் பூச்சிதான் நான் கூறப்போகும் கறையான். மரங்களைத் துளைத்து மரப்பொடியை உட்கொள்ளும் இப்பூச்சியின் வயிற்றிலிருக்கும் சில கிருமிகள், மரப்பொடியைச் செமிக்கச் செய்கிறது. கறையான்கள் சில, வீடுகளிலும், கட்டடங்களிலுமுள்ள கட்டைகளைத் தின்று கெடுக்கின்றது. இவைகளை அழிக்க, டி. டி. ரி., 'குளோடேன்', 'லின்டேன்' போன்ற மருந்துகள் பயன்படுத்தப்படுகிறது.



வரகவி ரவீந்திரநாத தாகூரின் நூற்றுண்டு விழா உலகெங்கிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. அண்மையில் கல்கத்தாவில் நடைபெற்ற தாகூர் விழாவுக்கு பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரல்ட் மாக்மில்லன் அனுப்பிய வாழ்த்துச் செய்தியை இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் சேர் போல் ஜோ-பூத் வாசிக்கின்ருர்.

## அன்னையின் அன்பு

— செ.அரியமலர் —

அன்புக்கு இணையானது இவ்வுலகில் வேறெதுவுமில்லை. அன்பு என்னும் இம் மூன்றெழுத்துச் சொல் என்றுமே அழியாது. வாழ்க்கை என்னும் பூங்காவில் வாடாமலராக என்றும் மணம் வீசுவது அன்புதான். உலகம் மாறலாம்ஆனல் உண்மையான அன்பு ஒருநாளும் மாருது; அப்படி மாறும் அன்பு, அன்பாகாது என்ருர் உலகப் புகழ்பெற்ற நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர்.

சகோதர அன்பு, சிநேகித அன்பு, தாயன்பு என அன்பு பல வகைப்படும். சகோதர அன்பு பாசத்துடன் உதயமானது. சிநேகிதத்தில் ஆரம்பமாகும் அன்பு ரப்பர்பலூனைப் போன்றதாகும். நட்பு வளர வளர அன்புவளரும்.சில வேளைகளில் காற்றுநிறைந்த"பலூன்" வெடிப்பது போன்று அதுவும் உடைந்து விடும். இவை சகளைவிட தாயன்புதான் தரணியின் மேலான அன்பாகக் கருதப்படுகின்றது. தாயின் அன்பு எல்லையற்றது.

பத்துமாதம் சுமந்திருந்து பெற்றெடுத்து, பகல்இரவாக விழித்திருந்து, தனது மகனை உலகில் நல்லவனுய் வாழ வழி செய்பவள் தாய்தான். தன் நலம் நோக்காது, செய் நன்றி எதிர்பாராது அல்லும் பகலும் பாடுபடுபவள் தாய்தான்.

அன்பைப் புகுத்தி வளர்க்கும் பெற்ளேருக்கு நாம் என்றும் கடமைப்பட்டவர்களாய் இருத்தல் வெண்டும். "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்பது பழமொழி. மக்களின் வழிகாட்டியாக இருக்கும் தாயன்புக்கு ஈடான அன்பை இவ் உலகில் வேறு எங்கிலும் காண முடியாது!

## —: கடல் :—

— ந. செல்லப்பன் —

கன்னங்கரிய நற்கடலே
கதிரவன் தோன்றும் பொற்கடலே
மின்னும் முத்தும் மணிகளுமே
மெத்தத் தருவாய் நற்கடலே

வெண்சங் கொன்று வேண்டுமெனில்
விரைந்தே தருவாய் பலநூறு
உண்ண உணவு கேட்டாலோ
உடனே மீன்வகை தருவாயே

உண்ணும் பொருட்டுச் சுவை சேர்க்கும்
உப்பைத் தந்து மகிழ்கின்ருய்
வண்ணப் பொருள்கள் பலவற்றை
வாரி யள்ளித் தருகின்ருய்

எல்லாப் பொருளும் உன்னிடமே
இருந்தும் ஒருதுளிக் குடிதண்ணீர்
இல்லா திருப்பதும் ஏன்கடலே?
இறைவன் செயலோ? சொல்கடலே.

# அறிவுச் செல்வம்

— ஜி. எம். —

★ தலையை அறுக்காமலே, இரத்தம் ஒரு துளியும் சிந்தாமலே, மூளையில் வளர்ந்த சதை சமீபத்தில் அறுத்தெறியப்பட்டது. அணுக்கதிர்களைப் பாய்ச்சி எளிதில் முடிக்கப்பட்ட இவ்வரிய சாதனை சுவீடன் நாட்டில்நிகழ்த்தப்பட்டது.

★ 'தீயவை கேளாதே', 'தீயவை பேசாதே'. 'தீயவை பாரதே' என்ற அறிவுரை வழங்கும் குரங்குகளின் உருவங்கள் முதன் முதலில் ஜப்பானில், நிக்கோ என்ற ஊரில் டொஷோகு ஆலயத்தின் வாயில் மேற்புறத்தே மரத்தில் செதுக்கப்பட்டிருந்தன.

★ உலகெங்கும் 273 மாதங்களுக்கொரு முறை பருவ நிலைகள் - அதாவது அதிகமான குளிர், அதிகமான வெயில், விடா மழை போன்றவை மீண்டும்மீண்டும் வந்து தோன்றும் என்று வாஷிங்டனைச் சேர்ந்த டாக்டர் சார்லஸ் ஆபட் என்பவர் கணித்துள்ளார்.

★ உப்பு மட்டும் சேர்த்துக் கொள்ளவில்லையெனில் மனித இனமும், விலங்கினத்தில் பெரும் பகுதியும் அழிந்து விடுமாம் பெரும்பாலான மனிதர்கள் ஒரு மாதத்திற்கு மேல் உப்பின்றி உயிருடன் இருக்க முடியாதாம்.

★ சில வகையான உருளைக் கிழங்குகள் சமையல் செய்த பின்னர் கருமை நிறத்தை அடைகின்றன. கிழங்கிலுள்ள குளோரோஜெனிக் அமிலம் என்ற நீல நிறமான ஒரு கூட்டுப் பொருளும், இரும்பும் சேர்ந்துதான் இம்மாற்றத்தை உண்டாக்கின்றன.

★ மின்னொளியோடு சேர்ந்த 'கமரா'க்கள் பொருத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், ஜப்பானில் போக்குவரத்துப் பாதுகாப்பாளர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மிகவும் ஆபத்தான சம்பவங்கள் நிகழும் போது அவற்றைப் படம் பிடித்து நிரூபிக்க இந்த முறை பயன்படுத்தப்படுகிறது.

★ இந்தியாவில் முதலாவது பிரிட்டிஷ் மகாதேசாதிபதியாக இருந்தவரின் பெயர் வாரன் ஹேஸ்டிங்ஸ். அவர் 1774-ம்ஆண்டு தொடக்கம் 1786-ம்ஆண்டு வரை பதவி வகித்தார்.

★ நாம் தினமும் 23,400 தடவைகள் சுவாசிக்கின்ருேம். நாம் உள்ளிழுக்கும் காற்றின் அளவு 438 கன அடியாகும்.

★ பண்டைக்காலத் தமிழரிடையே வங்கியம் என வழங்கிய இசைக் கருவிதான் இன்று புல்லாங்குழல் என அழைக்கப்படுகிறது.

★ பறவைகளை மின்னல் தாக்குவதில்லை. அவைகளின் இறகுகளின் வழியாக மின்சாரம் செல்ல முடியாததால் அவற்றை மின்னல் தாக்காது.

★ மனிதனுடைய உடலில் ஒவ்வொரு வினடியும் 30 லட்சம் சிவந்த இரத்த அணுக்கள் உற்பத்தியாகின்றன.

★ மீன் பிடிப்பவர்கள் புதிதாக ஒரு முறையைக் கையாள்கின்றனர். தூண்டில் கம்பியிலுள்ள நூல் உருளையோடு ஒலிக்கருவி ஒன்றை இணைத்திருக்கின்றனர். தூண்டிலில் மாட்டிய மீன் இழுக்கும் போது, ஒலிக் கருவி மணி அடிக்கும் அல்லது தூண்டிலில் மின்னெளி ஏற்படும். இந்த முறையினல் ஒருவர் ஒரே சமயத்தில் இரண்டுமூன்று தூண்டில்களைப் பயன்படுத்தி மீன் பிடிக்கலாம்.


'சிரநேத்திராஞ்சன தைலம்'
விடுதலையளிக்கும்போது
நீங்கள்
சிரசு கண் மூக்கு
சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும்
வேண்டுமா?
தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த
ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்
ஆச்சரிய பலனையளிக்கும்!
காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு
கொள்ளவும்:
மு. க. ஜெகநாதன்
யூனனி கண் நிபுணர்
பெரியகடை யாழ்ப்பாணம்



# ஆஸ்பத்திரியின் அவசர தேவைகள்

## வைத்திய அதிபரின் அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பெரியாஸ்ப்பத்திரிச் சபையின் கூட்டமொன்று இம் மாதம் 10-ம் திகதி திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

இக் கூட்டத்தில் ஆஸ்பத்திரியின் அவசர தேவைகள் அடங்கிய வைத்திய அதிபரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படுமெனத் தெரிகிறது.

சென்ற 16-ம் திகதி நடைபெற்ற ஆஸ்பத்திரிச் சபைக் கூட்டத்தில இதன் அங்கத்தவரில் ஒருவரான திரு. எஸ். சிவபாதசுந்தரம் வைத்தியசாலையின் அவசர தேவைகளைக் கொண்ட அறிக்கையொன்றை வைத்தியசாலைத் தலைவர் சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்டிருந்தார். இதனைச் சபையும் அங்கீகரித்தது. இலாகா அதிபர்கள் தத்தம் அறிக்கைகளைச் சமர்ப்பிக்காதபடியால் அறிக்கை பூர்த்தியாகத் தாமதமானதாகவும் கூடிய விரைவில் அறிக்கை முடிவாகுமெனவும் வைத்தியசாலை அதிபர் தெரிவித்திருந்தார்.

பெரியாஸ்பத்திரியில் ஏற்பட்டிருக்கும் இட நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு வெளிநோயாளர் பகுதி, கண் நோயாளர் பகுதி, பிரசவ பகுதி என்பவற்றை படிப்படியாக வேறு இடங்களுக்கு அப்புறப் படுத்தும்படி சுகாதார மந்திரியைக் கேட்டுக் கொள்ளும் பிரேரணையொன்றையும் திரு. ஆ. துரைராசசிங்கம் இக்கூட்டத்தில் கொண்டுவருவார்.

டாக்டர் ஆர். இ. வி. யோகரத்தினம், திரு. ஏ. வி. வன்னியசிங்கம், திரு. ஏ. ஜே காசிப்பிள்ளை, காதி எம். எம். சுல்தான் ஆகியோர் ஆஸ்பத்திரிச் சபையின் புதிய அங்கத்தவர்களாக சுகாதார சேவை நிரந்தரக் காரியதரிசியால் நியமிக்கப்பட்டுள்ளனர். இக் கூட்டத்தில் இந்நியமனங்கள் சபைக்கு அறிவிக்கப்படும்.

# சைக்கிளில் சென்றவரை காட்டு யானை தாக்கியது

அனுராதபுரம், வெள்ளி

மதவாச்சி-மன்னார் வீதியில், சைக்கிளில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒருவர், எதிர்பாராதவிதமாகக் காட்டுக்குள்ளிருந்து வந்த யானை ஒன்றினால் தாக்கப்பட்டார்.

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அவர், யானை வருவதைக் கண்டு, தன்னால் இயன்றளவு வேகமாகத் தமது சைக்கிளைச் செலுத்தினார். ஆனால் யானையும் தன் முயற்சியை விடவில்லை. தனது முழுப் பலத்தையும் சேர்த்து சைக்கிளில் சென்றவரைத் தாக்கியது.

கீழே விழுந்த அவர் சைக்கிளை அந்த இடத்திலேயே போட்டுவிட்டு, காட்டுக்குள் தவழ்ந்து சென்றுவிட்டார். மனிதனைக் காணாத அந்த யானை, தனது முழுக் கோபத்தையும் சைக்கிளின் மேல் காட்டிவிட்டு, சைக்கிளின் பகுதிகளைத் தூள்தூளாக்கிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றது.

சைக்கிள் பிரயாணி சொற்ப காயங்களுடன் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

# வானொலி நிகழ்ச்சிகள்

## கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

### சனி 8-7-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வி. சோமசுந்தரம்—வயலின்.

இரவு 7-15 நேயர்கடிதம், 7-30 என். இராஜு—பாட்டு, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 அறிவுச்சுழல் இல: 100, 9-45 ரி. இரத்தினம்—லயவின்யாசம், 10-00 நேயர்விருப்பம்

### ஞாயிறு 9-7-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 குரல் இசை, 8-30 ஞான—அஞ்சலி, 9-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்பகுதி.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 பி. நாகமுத்து—பாட்டு, 5-45 திரைக்குரல், 6-10 மெல்லிசை பாடல்கள், 6-30 மனோரஞ்சிதம் லோகேஸ்வரன்—கோட்டு வாத்தியம்.

இரவு 7-00 மாதர்கேட்டவை, 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 சரஸ்வதிதேவி வயித்திலிங்கம்—பாட்டு, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 'மணமகன் தேவை'—நாடகம், 9-45 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

## திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

### சனி 8-7-61

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக குறிப்புகள், 7-30 இசைக்கோவை-ஜலதரங்கம்.

பகல் 1-00 பக்திப்பாடல்கள், 1-50 குரல்இசை, 2-15 இசைக்கோவை—ஜலதரங்கம.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'தீபம் அணைந்து விட்டது' — நாடகம், 8-15 திரைப்பட இசை, 8-30 டெல்லி அஞ்சல், 8-00 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீதம்.

### ஞாயிறு 9-7-61

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 எம். கே. ராஜாமணி—கிளாரினெட், 8-15 நெல்லை டி. வி. கிருஷ்ணமூர்த்தி—பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 கோவை பி. தக்ஷணாமூர்த்தி—வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ருக்மணிசுந்தராஜன்—பாட்டு, 6-30 எம், கே ராஜாமணி—கிளாரினெட் 9-15 வாத்திய இசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 ஒலிப்பதிவுகள்



# "மனவளர்ச்சிக்கு உடல் நலம் தேவை"

மாவிட்டபுரம், வெள்ளி

"உடல் நலம், மன வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இதனால் பாடசாலைகளில் விளையாட்டு ஒரு பாடமாக அமைகின்றது. உடல் வளர்ச்சி இல்லாது எவ்வளவுதான் படித்தாலும் பிரயோசனமில்லை. விளையாட்டுக்களின் மூலம் வெற்றிதோல்விகளைக் கண்டு உள்ளம் சமரசமடைகிறது. இது பிற்கால வாழ்விலும் இன்பதுன்பங்களை- வெற்றி தோல்விகளைக் காணும்போது மனம் சமரசப்பட வழிவகுக்கும். ஆதலால் விளையாட்டுப் போட்டிகள் அவசியம். இதற்கு பெற்ருேர் ஊக்கம் தந்து வருடம்தோறும் நல்லமுறையில் விளையாட்டுப்போட்டி நடாத்த உதவிகள் புரிய வேண்டும். அரசினர், பாடசாலைகளை எடுத்துவிட்டார்கள் என்று ஒதுங்கியிருக்காமல் உங்கள் பாடசாலை என்ற எண்ணத்தோடு எல்லோரும் உதவி செய்வீர்களென எதிர்பார்க்கின்றேன்." இவ்வாறு சுன்ஞகம் மயிலணி சைவவித்தியாசாலை இல்லங்களின் விளையாட்டுப் போட்டிக்குத் தலைமைதாங்கிய தலைமை ஆசிரியர் திரு மா. குமாரசுவாமி கூறினர்.

மேற்படி விளையாட்டுப் போட்டியில்பங்குபற்றியசிறந்த வீர,வீராங்கனைகளாகத்தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு:-

**மேறபிரிவு**

க. சின்னத்துரை சுந்தரர் இல்லம், வெ. புனிதவதி சுந்தரர் இல்லம், த. இராசபூவதி சம்பந்தர் இல்லம்.

**மத்திய பிரிவு**

மி. ஆறுமுகநாதன் சம்பந்தர் இல்லம், இ. திலகவதி சம்பந்தர் இல்லம்.

**கீழ்ப் பிரிவு**

மு. தருமராஜா சுந்தரர் இல்லம், கு. நாகம்மா அப்பர் இல்லம்.

**ஆரம்ப பிரிவு**

அ. சுந்தரலிங்கம் அப்பர் இல்லம், சி. ராஜலட்சுமி சம்பந்தர் இல்லம்.

**பாலர் பிரிவு**

செ. சர்வேந்திரன்,மு. லோகசாலனி சுந்தரர் இல்லம்.

போட்டியில் சம்பந்தர் இல்லம் 233 1 | 2 புள்ளிகளும், சுந்தரர் இல்லம் 206 புள்ளிகளும், அப்பர் இல்லம் 195 1 | 2 புள்ளிகளும் பெற்றன. சம்பந்தர் இல்லம் இவ்வருட சாம்பியஞகியது.

## கைத்தொழில் பேட்டைகள் நிறுவ அரசினர் முடிவு

கண்டி. வெள்ளி

"மின்சார சக்தியினுல் இயங்கும் 1,400 நெசவுத் தறிகளைச் சீனுவிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு எமது அரசாங்கம் சீன அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவருகின்றது. இங்கு ஏற்கெனவே உள்ள கைத்தறி நெசவு நிலையங்களில் இவை நிறுவப்படும்."

இவ்வாறு கைத்தொழில் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அம்பிட்டியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நெசவுத்தொழிலை விருத்தி செய்வது அரசாங்கத்தின் நோக்கமாகும். எமது நாட்டில் நல்ல சேலைகள் நெசவுசெய்து விற்பனையாகவேண்டும். இன்று 145,000,000 யார் சேலை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. உள்நாட்டிலே நாம் 3,000,000 யார் மட்டும்தான் உற்பத்தி செய்கிறேம்."

நாட்டிலே ஆங்காங்கு கைத்தொழில் பேட்டைகள் நிறுவப்படல்வேண்டுமெனத் திரு. மைத்திரிபால விடுத்த ஒரு கோரிக்கையை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. மற்றைய குடியேற்றங்களிலும் தொழிற் பேட்டைகளிலும் பார்க்க இவை வேறுபட்டனவாக இருக்கும். பித்தளை வேலைகள், பாய் இளைத்தல், மரநுட்ப வேலை, வர்ணப் பூச்சுவேலை போன்ற சிறிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதையே இவை மேற்கொள்ளும். இவற்றுக்குத் தேவையான இயந்திரங்களையும் பணத்தையும் அரசாங்கம் கொடுக்கும்.

வெளிநாடுகளிலிருந்து வரும் பொருள்களுக்கே இங்கு அதிகம் கிராக்கியிருக்கிறது. வெளிநாட்டுப்பொருள்களோடு போட்டியிட வேண்டிய நிலையிருப்பதால் உள்ளூர் கைத்தொழிற் கலைஞர்கள் இன்று நஷ்டப்படுகின்றனர்.

## விசாரணைக் குழு முதல் கூட்டம்

கொழும்பு, வெள்ளி

இலங்கை போக்குவரத்துச் சபையின் விசாரணைக் குழு இன்று அதன் முதற் கூட்டத்தை நடத்தியது. திரு. எச். வி. பீரிஸ் இதற்குத் தலைவர்.

## மதுபானத்தடைக்கு பொலிஸார் ஒத்துழைப்பு அவசியம்

கெஸ்பாவ, வெள்ளி

"சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் மதுபானங்களைத் தடைசெய்வதற்கு, பொதுமக்களின் ஒத்துழைப்புத் தேவை என்று பொலிஸ் இலாகா தெரிவித்திருந்தாலும், அவர்களுக்கு அது அவசியமில்லை" என்று கங்கொடவில்லையில் நடைபெற்ற கூட்டமொன்றில் வண ,கலுகொண்டயவி பஞ்ஞசேகர மகாநாயக்கதேரோ பேசும்போது குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:-

பொலிசார் உண்மையாகவும் நேர்மையாகவும் இருப்பதுதான் மிக அவசியமான தொன்று. பொலிஸார், கிராம அதிகாரிகள், மற்றும் பலரும் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் மதுபானங்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பது பற்றி அறிந்திருந்தாலும், அதைத் தடுப்பதில் அவர்கள் முயற்சிப்பதில்லை. குறிப்பிட்ட சில பகுதிகளில், சில கலால் அதிகாரிகள், ஒரு மந்திரியின் சம்பளத்தைப் பார்க்கிலும் "சந்தோஷம்" பெற்று அதிகமாக உழைக்கின்றனர். சட்டவிரோத மதுபானங்களைத் தடைசெய்வதற்கு மேலும் மேலும் அதிகமான தவறணைகளைத் திறக்கவேண்டும் என்று சில அரசியல்வாதிகள் கூறுகின்ருர்கள். அவர்கள் தமது அறியாமையின் நிமித்தம்தான் இப்படிக் கூறுகின்ருர்கள்."

## கடத்திச் சென்றதாக வழக்கு

மாவிட்டபுரம், வெள்ளி

பலாலியைச் சேர்ந்த எல்லுப்பொலை கந்தன் என்பவர் தனது சொந்த மருமகளான கிருட்டினர் புவனேஸ்வரி என்னும் 13 வயது நிரம்பிய யுவதியை அவரின் பெற்ருேரின் பாதுகாப்பிலிருந்து அத்துமீறிக் கடத்திச் சென்றதாக காங்கேசன் துறை பொலிஸாரால் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி டபிள்யூ. டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எதிரியை இம்மாதம் 17-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## இடமாற்றம்

மாவிட்டபுரம், வெள்ளி

இலங்கைப் போக்குவரத்துச் சபை, மல்லாக கிளையில் கடமையாற்றிய திரு. கே. குமாரகுலசிங்கம் பருத்தித்துறைக் கிளை டிப்போவிற்கு மனேஜராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்கு விலியந்தலை கிளை டிப்போவில் கடமையாற்றிய திரு. எஸ். என். பாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன் துறை விற்பனவு இலாகாவில் லிகிதராகக் கடமை யாற்றிய கே. இரத்தினசபாபதி கிளிநொச்சி விற்பனவு இலாகாவிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை, கிராமச் சங்கத்தில் வருமான வேலை ஓவர்சியராக கடமையாற்றிய என். கிருஷ்ணபிள்ளை மல்லிகைத் தீவுக் கிராமச் சங்கத்திற்கு லிகிதராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்திற்குப் பருத்தித்துறையைச் சேர்ந்த வி. தங்கவடிவேல் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## 75பேர் கடன்உதவி கோரியிருந்தால் சீட்டிழுப்பில்லை

கொழும்பு, வெள்ளி

இரண்டாயிரம் ரூபா கடன் உதவிபுரியும் சீட்டிழுப்பைத் தேசிய வீடமைப்புத் திட்ட இலாகா இம்மாதம் 17ம் திகதி ஆரம்பிக்கும். ஒவ்வொரு தொகுதிக்கான சீட்டிழுப்பு கொழும்பு, கண்டி, காலி, அனுராதபுரம் ஆகிய நான்கு இடங்களிலும் நடாத்தப்படும். எழுபத்தைந்துக்கு மேற்பட்டவர்களோ அல்லது அதற்குக் குறைந்தவர்களோ கடன் உதவி கோரி விண்ணப்பம் செய்திருக்கும் தொகுதிகளில் கடன் கோரிய எல்லோருக்கும் சீட்டிழுப்பு இல்லாமலே கடன் உதவி தரப்படும்.

## வள்ளுவர் இல்லம் வெற்றி

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இல்லங்களுக்கிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில், வள்ளுவர் இல்லத்திற்கும், இளங்கோ இல்லத்திற்கும் நடந்த போட்டியில் வள்ளுவர் இல்லம் 13 அதிகப்படியான கோல்களால் வெற்றியீட்டியது.


இன்று முதல் குதூகல ஆரம்பம்!

கிங்ஸ்லி பிளாஸா வெம்பிளி
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி)

நவா மொடர்ன் விஜிதா
(கொம்பனித்தெரு) (பதுளை) (மஸ்கேலியா)

ஜெமினி கணேசன், பத்மினி
கே. ஏ. தங்கவேலு, மனோரமா
எஸ். நடராஜன்

மற்றும் பலர் நடித்த



மதுரம் பிக்சர்ஸ்

மீண்ட சொர்கம்

கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

பின்னணி: ஏ. எம். ராஜா, சீர்காழி
கோவிந்தராஜன், ஜிக்கி, எம். எல். வசந்தகுமாரி

மக்கள் கண்குளிர, இதயம் மகிழ, கலையும், பண்பும் இணைக்கப்பட்ட அருமையான அமைப்பு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-15 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-15 மணிக்கும்
சிவாஜி கணேசன், பண்டரிபாய்
நரசிம்மபாரதி
நடித்த
திரும்பிப்பார்

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30 மணிக்கும் மாலை 5-30மணிக்கும்
ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி
நடித்த
மாதர் குல மாணிக்கம்

பிற்பகல் 2, 3-45 சனி, ஞாயிறு காலை 0-30
பெட்லன் காஸ்ரா, கேர்க் டக்லஸ்
நடித்த
த டெவில்ஸ் டிசைப்பிள்
(சண்டைகள் நிறைந்த படம்)


## மரண அறிக்கை

மார்க் சவிரிமுத்துவின் மனைவியும்,
எம். எஸ். பீட்டர் (ஈழநாடு), எம். எஸ். இமானுவல்,
எம். எஸ். பெட்ரிக் சவிரிமுத்து, எம். எஸ். தோமஸ்,
ஆகியோரின் தாயாரும்
பிலோமினு பீட்டர், மேரி இம்மானுவல்,
திரேசா (மணி) சவிரிமுத்து, ரீட்டா தோமாஸ்
ஆகியோரின் மாமியாருமாகிய

**எலிஸபெத்**

அவர்களின் பூதவுடல்
8-7-61 சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு
அர்ச். கொஞ்சேஞ்சி மாதாவின் சேமக்காலையில்
நல்லடக்கம் செய்யப்படும்.

33, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம். 7—7—61.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜுலை மாதம் 8-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.